தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | **70/2024** | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | திரு.குணசேகரன் | | | |
| **Date** | : | **17.04.2026** | | | |
| **Time** | : | **12.43 p.m to 1.04 p.m** | | | |

நி.த.சா.**1.**திரு.குணசேகரன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் முது நிலை உதவியாளர் என்றால் ஆமாம். மனுதாரர் பணி நிரந்தரம் செய்ய கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் 90 நாட்கள் வேலைக்கு வரவில்லை என சொல்வதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்கள் நிலையாணை படி 240 நாட்கள் தொடர்ந்து வேலை செய்யும் பட்சத்தில் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்றால் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்யும்போது சரிதான். தொ.சா.ஆ.**1** தற்காலிக பணி நியமன உத்தரவு என்றால் சரியல்ல. சேம நல (Reserved Driver) ஓட்டுனருக்கான உத்தரவு ஆகும். தொ.சா.ஆ.**2** வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட ஆவணம் என்றால் ஆமாம். தொ.சா.ஆ.**3** சேமநல ஓட்டுநர் நியமன ஆணை என்றால்

ஆமாம். தொ.சா.ஆ.4 தினக்கூலி ஓட்டுனர் நியமன ஆணை என்றால் ஆமாம். 19.01.2010 அன்று மனுதாரரின் ஓட்டுநர் உரிமம், திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தான் நிரந்தர தொழிலாளியாக கருதி உத்தரவு போட்டோம் என்றால் சரியல்ல. சேம நல ஓட்டுனராக நியமிக்கப்படும் ஒருவர் தொடர்ந்து 240 நாட்கள் வேலை செய்யும் பட்சத்தில் எங்கள் நிலையாணை படி அவரை நிரந்தர தொழிலாளியாக கருத வேண்டும் என்றால் சரியல்ல. தொ.சா.ஆ.6 நிலையாணை பிரிவு 4ல் நிரந்தர செய்யப்பட வேண்டும் என கண்டுள்ளது என்றால் தினக்கூலி அடிப்படையில் நியமிக்கும் போது நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என கண்டுள்ளது. தொ.சா.ஆ.5 பணி நிரந்தர உத்தரவு என்றால் ஆமாம். தொ.சா.ஆ.5 முன்னிலைக்கு பணி நிரந்தர உத்தரவு கொடுத்தது தவறு என்றாலும் 19.01.2010 தேதியிட்ட உத்தரவு முன்னிலைக்கு அன்றைய தேதியில் இருந்து 240 நாட்கள் முடிவடைந்த மறு தினத்தில் இருந்து பணி நிரந்தரம் செய்து உத்தரவு பிறப்பித்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 07.09.2009 ல் தற்காலிக பணி நியமன உத்தரவு வழங்கியதில் இருந்து எந்த வித விடுப்பும் எடுக்காமல் தொடர்ந்து பணி செய்து வந்தார் என்றால் சரியல்ல. 19.01.2010 தேதியிட்ட சேம நல ஓட்டுநர் நியமன உத்தரவில் இருந்து தொடர்ந்து 240 நாட்கள் பணி செய்து வந்தார் என்றாலும் நிர்வாகம் பணி

நிரந்தர உத்தரவு வழங்க மறுத்து வந்தது என்றாலும் சரியல்ல. சேம நல ஓட்டுநர் பட்டியலில் தான் மனுதாரர் பெயர் உள்ளது. அதற்கான நியமன உத்தரவு எதுவும் வழங்கப்படாது தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்படும் போது தான் நிலையாணை பொருந்தும். மனுதாரர் எந்தவித விடுப்பும் எடுக்காமல் தொடர்ந்து பணிக்கு ஆஜராகி வந்தார் என்றாலும் அவருக்கு பணி நிரந்தர உத்தரவு வேண்டும் என்றே வழங்க கூடாது என்ற எண்ணத்தில் காலம் கடத்தி வழங்கி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு அவர் கேட்டுள்ளபடி பண பயன்கள் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:17.04.2026.